பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 30 வெள்ளிக்கிழமை 15.08.2025 கதிர் 279

## இ னி
## து
## ரகசியம் அல்ல!

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தேடப்பட்டு வருகிறார். லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு அவரைக் கைதுசெய்வதற்குத்தொடர்ந்து ☞ 2

## ‘ஸ்கான்’ அறிக்கைகளின்படி

# செம்மணி எலும்புகளை மீட்க மேலும் 8 வாரங்கள் தேவை

## பழைய செம்மணி வழக்குடன் புதியதையும் சேர்க்கும்படி சட்டத்தரணி சுமந்திரன் யாழ். நீதிமன்றத்தில் கோரிக்கை

**செம்மணிப் புதைகுழிகளில் தற்போது தோண்டப்பட்டுவரும் அரியாலை, சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் 8 வாரங்களுக்குத் தோண்டும் பணிகளை முன்னெடுப்பதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு யாழ். நீதிவான் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ‘ஸ்கானிங்’மூலம் மேலும் புதைகுழிகள் இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் தோண்டும் பணிகளை மேற்கொள்ள மேலும் 8 வாரங்கள் தேவை என மதிப்பீடுகள் முன்வைக்கப்பட்டதன் அடிப்படையில் நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.**

**சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் புதைகுழிகளைத் தோண்ட யாழ். நீதிவான் மன்றம் இரண்டாவது கட்டமாக ஏற்கனவே 45 நாட்களுக்கு அனுமதி வழங்கியிருந்தது. அதில் 15 நாட்களுக்கு ஒரு தொகுதி என்ற அடிப்படையில் இரு தொகுதிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய மூன்றாவது தொகுதியான 15 நாட்களுக்கான பணிகள் ஓகஸ்ட் 22 தொடங்கும்** ☞ 2

## பலஸ்தீனத்திற்கு ஆதரவாக கொழும்பில் போராட்டம்

தேசிய மக்கள் சக்தி கட்சியை தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள பலஸ்தீனத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பு நேற்று மாலை கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அலுலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

பலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் அரசு மேற்கொண்டுவரும் இன அழிப்பை நிறுத்துவதுமாறும் காசா மக்களுக்கான உணவுப்பொருட்களை கொண்டுசெல்ல இஸ்ரேலின் தடைகளை நீக்குமாறும் ஐக்கிய நாடுகள் சபை அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்துமே இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

போராட்டத்தில் மதகுருமார்கள், அரசியல் கட்சி தலைவர்கள், உறுப்பினர்கள் சிவில் அமைப்பினர் மற்றும் பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டிருந்தனர். இவர்கள் இஸ்ரேல் ஆளும்தரப்பு காசாவில் மேற்கொண்டுவரும் இன அழிப்பை நிறுத்துமாறும் பலஸ்தீன் மக்களின் பூர்விக பூமியில் இருந்து அவர்களை விரட்டுவதை நிறுத்துமாறும், காசா மக்களை பட்டினியில் போடுவதை நிறுத்துமாறு தெரிவித்து கோஷங்களை எழுப்பியும் இஸ்ரேலுக்கு எதிராக எழுதப்பட்ட சுலா கங்களை ஏந்தியும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரம்வரை இடம்பெற்ற இந்தகவயீர்ப்புபோராட்டத்தின் இறுதியில் ஐக்கிய நாடுகள் சபைக்கு கையளிப்பதற்காக ☞ 3

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் மீதான பிரேரணைக்கு திலித் ஜயவீர எதிர்ப்பு

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராகவேவாக்களிப்பேன் ஏனெனில் அவர் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக செயற்பட்ட காலத்தை அடியொற்றியதாக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படுவதை ஏற்க முடியாது என சர்வஜன சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்ற பொதுமக்க ளுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு ☞ 3

## மாகாண சபைகள் தேர்தலை நடத்தாதிருப்பது பெரும் அநீதி

### சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு

**இன்றளவிலே ஆட்சி நிர்வாகம் எனும் வாகனத்தில் மூன்று சக்கரங்கள் உரியவாறு செயற்பட்டாலும், நான்காவது சக்கரமான மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதித்துவம் தடைப்பட்டுள்ளது. அதன் விளைவாகக் குறிப்பாக வட, கிழக்கு மக்களால் ஆட்சி நிர்வாகத்தில் உரியவாறான பிரதிநிதித்துவத்தை வழங்கமுடியாதிருப்பது பெரும் அநீதியாகும். எனவே எந்தவொரு அரசியல் நலனுக்கும் அப்பாற்பட்டு, மாகாணசபைகளை உடனடியாக இயங்கச்செய்வது ஆளும்தரப்பின் பொறுப்பாகும் என சமூக நீதிக்கான** ☞ 3

## பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத ஆளும்தரப்பு பேருந்து சேவை தொடக்கத்தைக் கொண்டாடுகிறது

### இது வெட்கக்கேடு என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறிய ஆளும்தரப்பு, பேருந்து சேவையொன்றை ஆரம்பித்துவைத்து அதைக் கொண்டாடுகின்றனர். இது வெட்கக் கேடாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற போது அப்போதைய ஆளும்தரப்பு அதற்கு பொறுப்பு கூறவேண்டுமென வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, பாதாள உலகக் கும்பல்களால் கொல்லப்படும் உயிர்களுக்கு பொறுப்பு கூற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 10 மாதங்களாக பொய்களாலேயே தேசிய மக்கள் சக்தி நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. இதற்கு மத்தியில் தற்போது தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி.க்கு இடையில் கடுமையான முரண்பாடு;கள் தோற்றம் பெற்றுள்ளன. சிச்சியின் செய்மதி விவகாரத்தில் பிரதமரும், அமைச்சர் வசந்த சமரசிங்கவும் முரண்பட்;ட கருத்துக்களைக் கூறியதால் அவை பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது சமூகத்தில் பாரிய சர்ச்சையை தோற்றுவித்துள்ளதால் முதலீட்டு சபையின் அதிகாரிகளுக்கெதிராக ☞ 3

## மாகாண சபைத் தேர்தலை நடத்த முழு ஒத்துழைப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று ஆளும் மற்றும் ☞ 2

## திருமலை, முத்துநகர் மக்களின் பிரச்சினைக்கும் தீர்வு வேண்டும்

### போராட்டத்தில் ஈடுபடவும் தயார் என்கிறார் வசந்த முதலிகே

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டத்தை இடைநிறுத்தியதை போன்று திருகோணமலை முத்துநகர் மக்களின் காணி பிரச்சினைக்கும் ஆளும்தரப்பு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். முத்துநகர் மக்களை மாற்றான்தாய் பிள்ளை போல் பார்க்கக்கூடாது. இம்மக்களின் ☞ 3

## ரூ 1.4 கோடி லஞ்சம்பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் எஸ்.எஸ்.பி. கைதாகி மறியலில்

காலி மற்றும் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக (எஸ்.எஸ்.பி) செயற்பட்ட காலப்பகுதியில் பிறிதொரு நபரின் பெயரில் 3 தனிப்பட்ட வங்கிக் கணக்குகளைத் தொடங்கி திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்பினரிடமிருந்து ஒரு கோடியே 40 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் களப்படை தலைமையகத்தின் கலாசார பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகேவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

சந்தேக நபர் நேற்று பிற்பகல் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் கொழும்பு மேலதிக நீதிவான் பவித்ரா சஞ்சீவனி பதிரண இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

காலி மற்றும் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக செயற்பட்ட காலப்பகுதியில் பொலிஸ் களப்படைத் தலைமையகத்தின் கலாசார பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ ரஞ்சன் ஹியாரே கமகே நேற்று முற்பகல் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் பிறிதொருவரின் பெயரில் 3 தனியார் வங்கிக்கணக்குகளை ஆரம்பித்து திட்டமிட்டக் குற்றச்செயல்களுடன் ஈடுபடும் தரப்பினரிடமிருந்தும் பொலிஸ் நிலையத்தில் சேவைகளை ☞ 3

## பொலிஸார் குற்றங்களில் ஈடுபட ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்

### புதிய பொலிஸ் மா அதிபர் உறுதியளிப்பு

பொலிஸில் குற்றச்செயல்களில் ஈடுபடும் பலர் இருந்தனர். ஆனால் எனது பதவி காலத்தில் அவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெறாது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. அதேபோன்று பொலிஸார் ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும். பொலிஸார் மீது பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் நான் முன்னெடுப்பேன். எமது அதிகாரிகள் தவறிழைத்திருந்தாலோ அல்லது பொதுமக்களுக்கு சேவை வழங்க பின் நிற்பார்களாயின் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை ☞ 2

## இனி இது .....

முயற்சி எடுத்து வந்தாலும் அவர் சிக்குவதாக இல்லை. கைதில் இருந்து தப்புவதற்காக அவர் தாக்கல் செய்த முன்பிணை மனுவையும் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இதனால் அவர் தொடர்ந்து தலைமறைவாக இருக்கிறார். இதையடுத்து அவரை வெளியே கொண்டுவருவதற்கான நகர்வுகளில் ஆணைக்குழுவும் தீவிரமாகி இருக்கிறது.

அவரது சொத்துக்களை பறிமுதல் செய்வதற்குநடவடிக்கைஎடுப்பதன்மூலமாவது அவரை வெளியே கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அது ஆராய்ந்து வருவதாகத் தகவல். இதற்கான நீதிமன்ற உத்தரவைப் பெறுவதற்கு காய்நகர்த்தப்பட்டு வருகின்றது.

ராஜிதவைக் கைது செய்ய அவர் இருந்த பல இடங்களிலும் அவரைத் தேடி சோதனைகள் நடத்தப்பட்டாலும், அவரைக் கைது செய்ய முடியவில்லை. தமது பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதுங்கி இருந்த இடத்தையே கண்டுபிடிக்க முடியாத பொலிஸாரால் ராஜிதவின் மறைவிடத்தைக் கண்டுபிடிக்கவா முடியும் என்று நீங்கள் கேட்பதும் சரிதான். இருந்தாலும் ஆனால் தேசபந்துவின் விடயத்தில் கையாண்ட நடவடிக்கையை ஒத்த நகர்வுகளையே ராஜித விடயத்திலும் கைக்கொள்ள ஆணைக்குழு முயற்சிக்கிறது.

முன்னதாக, தேசபந்து தென்னகோனின் சொத்துக்களையும் பறிமுதல் செய்ய ஆணைக்குழு தயாரானபோதுதான் அவரும் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து நீதிமன்றத்தில் சரணடைந்தார். அதனால் அதேவழியில் ராஜிதவையும் வெளியே கொண்டுவர முடியும் என்று ஆணைக்குழுநினைக்கிறது. ஆனால், பழமும் தின்று விதையும் போட்ட ராஜித போன்ற அரசியல்வாதிகளிடம் ஆணைக்குழுவின் ‘பட்சா’ பலிக்கிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

.................................

இந்த ஆளும்தரப்பின் காலத்தில்தான் உப்பு இறக்குமதி செய்யப்பட்டது. வரலாற்றில் அண்மைக்காலங்களில்உப்புக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டதும் இந்த ஆட்சிக் காலத்தில்தான். தட்டுப்பாட்டை நிவர்த்திக்க உப்பை இறக்குமதி செய்யஆளும்தரப்புஅனுமதித்தது. அதற்கென ஒரு காலக்கெடுவும் வழங்கியது. ஆனால், தற்போது துறைமுகத்தில் 1000 உப்புக் கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

நாட்டிற்கு உப்பு இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட கடைசி நாளான ஜூன் 10க்குப் பிறகு நாட்டிற்கு வந்த 400 உப்பு கொள்கலன்களும்இவற்றில்அடக்கம். எஞ்சிய 600 கொள்கலன்களும் இலங்கையின் தர நிர்ணயநிறுவனத்தின்ஒப்புதல்கிடைக்காததால் தேங்கி நிற்பதாகவும் இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

தரநிர்ணயச்சிக்கலில்மாட்டிக்கொண்டுள்ள 600கொள்கலன்களையும்மீண்டும்ஏற்றுமதி செய்வதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுப்பதற்குத்தயாராகஇருக்கிறார்கள். ஆனால், இறக்குமதிசெய்யப்பட்ட400கொள்கலன்களும் காலக்கெடுவிற்குள் துறைமுகத்திற்கு வந்து சேராததற்கு காலநிலையே முக்கிய காரணம் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த உப்புக் கொள்கலன்கள் இந்தியாவின் குஜராத் மாநிலத்திலிருந்து, அதாவது இந்தியப் பிரதமரின் சொந்த மாநிலத்திலிருந்து வந்திருந்தன. திட்டமிட்ட திகதியில் குஜராத் துறைமுகத்திலிருந்து கொள்கலன் கப்பல் புறப்பட்டாலும் பாதகமான வானிலை காரணமாக கப்பல் கொழும்பை வந்தடைந்தபோது ஜூன் 10 கடந்திருந்தது. அதனால் அது தமது தவறு இல்லை என்று வர்த்தகர்கள் வாதிடுகின்றனர். இப்போது இந்த ஆளும்தரப்புக்கு இது புதிய தலையிடியாகமாறியுள்ளது. தரநிர்ணயத்தைக் காரணம்காட்டி தடுக்கப்பட்டுள்ள 600 கொள்கலன்களின் பின்னணியிலும் வேறு காரணங்கள்இருக்குமோ, ஏற்கனவே உப்பை இறக்குமதி செய்தவர்களின் இலாபத்தைப் பாதுகாப்பதற்காகவே இந்த உப்பை வெளியே விடாமல்தடுத்துவைத்திருக்கிறார்களோஎன்கிற கோணத்திலும் இந்த விவகாரம் நகர்கிறது. ரணில் காலத்தில் சீனி இறக்குமதி சர்ச்சை மாதிரி, வரும் காலத்தில் உப்பு விவகாரமும் சர்ச்சையாக மாறக்கூடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் மன்றத்தில் சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழக்கு நேற்று மீண்டும் அழைக்கப்பட்டது. விசாரணைக்குப் பின்னர் அது குறித்து அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

செம்மணிபுதைகுழிவிவகாரம்தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட வைத்திய அதிகாரியான பேராசிரியரும் அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர். பேராசிரியரின் அறிக்கையில், ஸ்கேனர் பயன்படுத்தப்பட்ட பின்னர் குறைந்தது எட்டு வாரங்களுக்கு மேலதிக அகழ்வுப் பணிகள் தேவைப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குஉரியநடவடிக்கைகளைமேற்கொள்ள நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம், நீதிமன்றஅனுமதியுடன்அகழ்வுப்பணிகளை மேற்பார்வை செய்ய அனுமதி பெற்றுள்ளது. இதனடிப்படையில், நான் இரு தடவைகள் அகழ்வு இடத்திற்குச் சென்று மேற்பார்வை செய்தேன். இதனைத் தொடர்ந்து, இன்றைய விசாரணையில் சில முக்கிய விடயங்களை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். இந்த அகழ்வு ஒரு இறப்பு விசாரணையின் கீழ் நடைபெறுகிறது. குற்றவியல் நடவடிக்கைகளில் இதற்கென தனியான சட்ட ஏற்பாடுகள் இல்லை. உடல் கண்டெடுக்கப்பட்டால், அது உடனடியாக இறப்பு விசாரணையாக மாற்றப்படுகிறது. இறப்பு விசாரணையின் முதன்மை நோக்கம், கண்டெடுக்கப்பட்ட உடல்களை அடையாளப்படுத்துவதாகும். எனவே, அகழ்வுப் பணிகளுடன், உடல்களை அடையாளப்படுத்துவது எவ்வாறு என்பது முக்கிய கேள்வியாக உள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி, இப்பணிகளில் ஈடுபடுவோருக்குநிபுணத்துவம்இல்லைஎன்று ஊடகங்களில்தவறானதகவல்கள்பரவுவதாக முறைப்பாடுசெய்தார். இதுதொடர்பாகஎழுத்து மூலம் முறைப்பாடு செய்யுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டது. இலங்கையில் அகழ்வுப் பணிகளுக்கு நிபுணத்துவம் இருந்தாலும், உடல்களை அடையாளப்படுத்துவதற்கு உரிய நிபுணத்துவம் இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. உதாரணமாக, 1999இல் செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட15எலும்புக்கூடுகள்முதலில் இந்தியாவின்ஐதராபாத்பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டன.ஆனால்,அங்குநிபுணத்துவம் இல்லாததால், அவை திருப்பி அனுப்பப்பட்டு, பின்னர் லாஸ்கோ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டன. தற்போது அவை இலங்கை பல்கலைக்கழகத்தில்உள்ளதாகஅறிகிறோம்.

1999இல் கொலைத் தண்டனைக் கைதியான சோமரட்ன ராஜபக்ச, மேல் நீதிமன்றத்தில்அளித்தகூற்றின்அடிப்படையில் செம்மணியில் அகழ்வு நடத்தப்பட்டது. அவர் 300 முதல் 400 உடல்கள் புதைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அப்போது 15 எலும்புக்கூடுகள் மட்டுமேகண்டெடுக்கப்பட்டன. தற்போது, 150 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை ராஜபக்ச குறிப்பிட்ட இடத்திற்கு அருகாமையில் உள்ளதால், அவரது கூற்று உண்மையாகஇருக்கலாம்என்பதுதற்போது நிரூபணமாகிறது. செம்மணி விவகாரம் தொடர்பாகய2899என்றவழக்குயாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பல படையினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டனர். பின்னர், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் சிலர் விடுவிக்கப்பட்டு, ஐவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்குபாதுகாப்புக்காரணங்களுக்காக முதலில் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் உள்ளது. இவ்வழக்கை மீண்டும் யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு நான் கோரியுள்ளேன். இதனைப் பரிசீலித்து, இரு வழக்குகளும் தொடர்புடையதாக இருப்பின், மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். 1999இல் செம்மணிப் பகுதியில் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்தன. இதனையடுத்து, கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் மூவர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு, 2003 ஒக்டோபர் 28இல் 210 பக்க அறிக்கையை சமர்ப்பித்தது.

இவ்வறிக்கையில், அரியாலை, சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்ப்பாண நகரம் மற்றும் அதை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டதற்கு படைத்தரப்பினர் பொறுப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள், முகாம்களின் பொறுப்பாளர்களின் பெயர்கள் உள்ளிட்டவை அறிக்கையில் உள்ளன. இவ்வறிக்கையின் பிரதியை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். இவ்விடயத்தில் பொறுப்பு வகித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேற வாய்ப்பு உள்ளதால், உரிய உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும் எனக் கோரியுள்ளேன். இதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றாலும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வழமையாக, இறப்பு விசாரணை முடிந்த பின்னரே குற்றப் புலனாய்வு ஆரம்பிக்கப்படும். ஆனால், பொலிஸ்மா அதிபரின் கோரிக்கையின் பேரில், தற்போது இணையாகவே புலனாய்வு நடத்தப்படுகிறது. இன்று, சட்டத்தரணிகளான மணிவண்ணன், குருபரன் மற்றும் நான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் அளிக்க வந்தவர்களை பயமுறுத்தினர் என்று முறைப்பாடு செய்தோம். இதனையடுத்து, வாக்குமூலங்கள் பகிரங்கமாக, அனைவரும் காணக்கூடிய இடத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார். நான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை இவ்விசாரணையிலிருந்து நீக்குமாறு கோரிக்கை விடுத்தேன்.

மேலும், சான்றுப் பொருட்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்படும்போது, அவை உரிய மேற்பார்வையுடன் கையாளப்படவேண்டும் எனவும், இதற்கு அனுபவமிக்க ஆய்வகங்கள் தேவை எனவும் வலியுறுத்தினேன். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மரபணுப் பரிசோதனைக்கானஆய்வகம்அமைக்கப்பட்டு வருவதாகவும், தேவையான உபகரணங்கள் வந்து சேர்ந்துள்ளதாகவும் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். ஆனால், இவ்வாறு புதிதாக அமைக்கப்படும் ஆய்வகத்தில் இப்பரிசோதனைகளை மேற்கொள்வது உகந்ததல்ல என நான் குறிப்பிட்டேன். அனுபவமும் நிபுணத்துவமும் உள்ள ஆய்வகங்களே இதற்குப் பொருத்தமானவை என வாதிட்டேன்.

எட்டுவாரங்களுக்குஅகழ்வுப்பணிகளைத் தொடர நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார். ஒகஸ்ட் 20 அகழ்வு இடம் சுத்தப்படுத்தப்பட்டு, ஒகஸ்ட் 22 மீண்டும் பணிகள் தொடங்கும் எனவும் அவர் கூறினார்.

## மாகாண....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றமை வரவேற்கத்தக்கது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் வினவியபோதுமேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபை தேர்தல் விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம்.நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தேர்தல் உரிமையை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

நீதியானதும், சுதந்திரமானதுமான வகையில்தேர்தலைநடத்துவதற்குசாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் தேர்தலை சிறந்த முறையில் நடத்துவோம்.கடந்த 09 மாதகாலத்துக்குள் மூன்று தேர்தல்களை சிறந்த முறையில் நடத்தினோம்.

மாகாண சபைத் தேர்தல் முறையில் காணப்படும் சட்டசிக்கலால் ஆணைக்குழுவினால் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க முடியாத தடைகாணப்படுகிறது. இந்தபிரச்சினைக்குநாடாளுமன்றம்தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும்.மாகாண சபைத் தேர்தல் முறையில் காணப்படும் சட்ட சி;க்கல் மற்றும் அவற்றுக்கான தீர்வு குறித்து உயர்நீதிமன்றம் பலமுறை வியாக்கியானமளித்துள்ளது.

நடைமுறை தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம்.தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கள் மற்றும் அரசுத் தலைவர் ஆணைக்குழுக்களில் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றமை வரவேற்கத்தக்கது.

மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும்.அந்நிறுவனங்கள் மக்கள் பிரதிநிதிகளால் செயலாற்றப்பட வேண்டும். இலங்கையின் தேர்தல் கட்டமைப்பில் மாகாண சபைத் தேர்தல் ஒரு பிரதான அங்கமாக காணப்படுகிறது. ஆகவே அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்பதைஅரசாங்கத்திடம்வலியுறுத்துகிறோம் என்றார்.

## பொலிஸார்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும் என பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்திருந்தார்.

நாட்டின் 37 ஆவது பொலிஸ் மாஅதிபராக சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய நியமனக் கடிதத்தை அரசுத் தலைவர் செயலாளர் கலாநிதிநந்தித்தசனத்குமாநாயக்கவிடமிருந்து புதன்கிழமை பெற்றுக் கொண்டார். இதற்கமைய பொலிஸ் கான்ஸ்டபிள் உப பொலிஸ்பரிசோதகர்மற்றும்உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய 3 பதவிகளையும் வகித்து பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்ட முதலாவது பொலிஸ் மாஅதிபராக வரலாற்றில் இடம்பிடித்த சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய நேற்றைய தினம் (14) தமது கடமைகளைப் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்று கொண்டார்.

இதற்கான நிகழ்வு பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றதுடன் பொலிஸாரின் மரியாதை அணிவகுப்புக்கு மத்தியில் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இதன்போது பிரதி பொலிஸ் மாஅதிபர்கள் உயர் பொலிஸ் அதிகாரிகள்உள்ளிட்டபலர்பங்கேற்றிருந்தனர்.

இங்கு விசேட உரையாற்றிய போதே பொலிஸ் மா அதிபர் தெரிவித்ததாவது:

பொலிஸ்திணைக்களத்தில்கடமையாற்றும் அனைவரும்சமமானவர்கள். குற்றங்களுக்கு எதிராகச் செயற்படுவதே பொலிஸ் திணைக்களத்தின்மிக முக்கிய நோக்கமாகும். நம்பிக்கையுடன் வாழக்கூடிய அமைதியான சூழலை உருவாக்குவதும் அதனை யதார்த்தமாக்குவதுமே நான் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பாகும். அதனை நிறைவேற்ற நான் எதிர்பார்க்கிறேன்.

நாட்டில் வாழ முடியாத மற்றும் தனது பெயரில் வாழ முடியாத போதைப்பொருள் கடத்தல்காரர்கள்வெளிநாட்டில்தலைமறைவாகி நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை காலமும் கிடைக்கப்பெற்ற அரசியல் அடைக்கலத்தை பயன்படுத்தியே அவர்கள் அதனை செய்து வந்தனர். இதற்காக அவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், முப்படைகளில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் சில பொலிஸ் உத்தியோகத்தர்களை யும் பயன்படுத்தி கொள்கிறார்கள்.

நாம் இது தொடர்பில் தகவல்களை திரட்டியுள்ளோம். குற்றவாளிகளுக்குதற்போது அரசியல் பாதுகாப்பு இல்லாமல் போயுள்ளது. இதற்கு முன்னர் தமக்கு அரசியல் பாதுகாப்பை வழங்கியவர்களை பயன்படுத்தி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க தற்போது முயற்சிக்கின்றனர். இது தொடர்பில் நாம் ஆராய்ந்து எதிர்காலத்தில் தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.

பொலிஸில் குற்றச்செயல்களில் ஈடுபடும் பலர் இருந்தனர். ஆனால் எனது பதவி காலத்தில் இவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெறாது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை.பொலிஸ் அதிகாரி ஒருவர் குற்றச்செயலில் ஈடுபட்டால் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவோம்.

அதேபோன்று பொலிஸார் ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும். பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த என்னால்

தொடர்ச்சி 3 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

## பொலிஸார்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆன அனைத்து நடவடிக்கைகளையும் நான் முன்னெடுப்பேன். எமது அதிகாரிகள் தவறிழைத்திருந்தால்பொதுமக்களுக்குசேவை வழங்க பின்நிற்பார்களாயின் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க ஒருபோதும் தயங்கபோவதில்லை.

பொலிஸாரினால்மக்களுக்குகடமைஆற்றப் படவில்லையெனில்அதுதொடர்பில்முறையிடு வதற்கும் பொலிஸ் தொலைபேசி இலக்க மொன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். அதன் ஊடாக எனக்கு தகவல்களை அனுப்பலாம். குற்றச்செயல்களை தடுக்க திட்டங்களை வகுத்துள்ளோம். வெளிநாட்டில் தலைமறைவாகியிருந்த 11 பேரை நாட்டுக்கு அழைத்துவந்துசிறையில்அடைத்துள்ளோம்.

எதிர்காலத்தில் அவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முடியாதவாறு அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கையை எடுப்போம். இலங்கை பொலிஸார் தொடர்பில் சர்வதேச ரீதியில் நன்மதிப்பு உள்ளது. ஆனால் பொலிஸில் சில குறைப்பாடுகள் உள்ளன. அவற்றை தூய்மைப்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது என்றார்.

## பாதுகாப்பை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைஎடுக்கவுள்ளதாகவசந்தசமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அந்த அதிகாரிகள் தவறான தகவலை வழங்கியிருந்தாலும்பிரதமரேசரியானதகவல் எதுஎன்பதைதெளிவுபடுத்தியிருக்கவேண்டும். ஆனால் தற்போது வசந்த சமரசிங்கவே அதனை செய்து கொண்டிருக்கின்றார். எனினும் அவருக்கு இன்னும் இது குறித்த தெளிவு இல்லை. இவ்வாறான சர்ச்சைகளுக்கு மத்தியில் மறுபுறம் மனிதப்படுகொலைகளில் ஈடுபட்டு வரும் பாதாளஉலகக்கும்பலும்தலைதூக்கியுள்ளது. நாளாந்தம் துப்பாக்கிச்சூடுகளால் உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உயிர்த்தஞாயிறுதாக்குதல்கள்இடம்பெற்ற போது அப்போதைய ஆளும்தரப்பு அதற்கு பொறுப்பு கூற வேண்டும் என வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, பாதாள உலகக் கும்பல்களால் கொல்லப்படும் உயிர்களுக்கு பொறுப்பு கூற வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம். பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடையவர்கள் மாத்திரமின்றி அப்பாவி மக்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். பொது வெளியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்த அழிவு தொடர்பில் அரசாங்கத்தில் எவரும் வாய் திறப்பதில்லை.

கடந்த ஆட்சியாளர்களைப் போன்று நாம் ஊடகங்களில் பிரசாரங்களை நடத்தப் போவதில்லைஎனக்கூறிய இவர்கள்தற்போது பேருந்து சேவையொன்றை மீள ஆரம்பித்து வைப்பதை மேள, தாள வாத்தியங்களுடன் பட்டாசு கொழுத்தி ஒரு பிரம்மாண்ட நிகழ்வாகக் கொண்டாடுகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை துறைமுகத்தை திறந்த வைத்தபோதோ அல்லது அதிவேக நெடுஞ்சாலையை திறந்து வைத்த போதே இந்தளவிற்கு பிரம்மாண்ட நிகழ்வினை நடத்தவில்லை.

தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்த தவறியவர்கள் பேருந்து சேவையை ஆரம்பித்து வைத்து விட்டு கொண்டாட்டம் நடத்துகின்றனர். தேசிய பாதுகாப்பு தொடர்பில் எமக்கு வகுப்பெடுப்பதாகக் கூறியவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பத்திருக்கின்றோம். தைரியமிருந்தால் அதற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஆளுந்தரப்பினருக்கு சவால் விடுக்கின்றோம். சாய்ந்தமருது தாக்குதல்களின் போது கிழக்கு கட்டளை தளபதியாக செயற்பட்டவே தற்போதைய பிரதி பாதுகாப்பு அமைச்சர்.

அரசாங்கத்தால்ஆளும்தரப்புதொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்? அரசுத் தலைவர் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இவரே பதில் பாதுகாப்பு அமைச்சராக செயற்படுவார். அவ்வாறான சந்தர்ப்பங்களில்விசாரணைகள்பக்கசார்பின்றி முன்னெடுக்கப்படும்என்றுஎவ்வாறுநம்புவது? பதவி விலகா விட்டால் அவருக்கு வேறொரு அமைச்சினை வழங்குவதற்கேனும் அரசுத் தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. எனவே நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கானசகலமுயற்சிகளையும் நாம் முன்னெடுப்போம் என்றார்.

## ரூ 1.4 கோடி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்ள வருபவர்களிடமிருந்தும் மற்றும் ஏனைய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களிடமிருந்தும் இலஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் ஒன்றைக் கோடியே 40 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்டமை ஆரம்பகட்ட விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இதற்கமைய சந்தேகநபர் இலஞ்சம் பெற்றுக்கொண்டமை மற்றும் நிதிதுய்தாக்கல் சட்டத்தின் கீழ் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நேற்று பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த விசாரணை அதிகாரிகள் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

இதற்கமையமுன்வைக்கப்பட்டவிடயங்களை கருத்திற்கொண்ட கொழும்பு மேலதிக நீதிவான் பவித்ரா சஞ்சீவனி பதிரண அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

## திருமலை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தில் ஈடுபட தயார் என்று மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுகுழு உறுப்பினர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டம் முத்து நகர் பிரதேச மக்கள் நேற்று வியாழக்கிழமை அரசுத் தலைவர் செயலகத்தின் முன்பாக "முத்து நகர் 800 ஏக்கர் விவசாயக் காணிகள் சூறையாடப்படுவதை நிறுத்து, இந்திய கம்பனிகளின் காணி மற்றும் வளத்திருட்டுக்கு எதிரான போராட்டத்தை தொடங்குவோம்' என்று பதாதைகளைஏந்தியவாறுஎதிர்ப்புப்போராட்டத்தில் 'ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கையில் இதனைத் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டம் முத்து நகர் பிரதேச மக்களுடன் பெரும் பிரச்சினையை வெளிப்படுத்துவதற்கான அரசுத் தலைவர் செயலகம் முன்பாக இன்று(நேற்று) ஒன்றுக்கூடினோம்.முத்து நகர் பகுதியில் 351 குடும்பங்களின் காணிகள் பலவந்தமான முறையில் கையகப்படுத்தப்பட்டு அவற்றை கம்பனிகளுக்கு விற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.இந்தபிரச்சினைகுறித்து இரண்டுவாரங்களுக்கு முன்னர் அரசுத்தலைவர் செயலகத்துக்கு அறிவுறுத்தினோம்.இருப்பினும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை.முத்து நகர் பகுதியில் பரம்பரை விவசாய காணிகளே இவ்வாறு பலவந்தமான முறையில் கையகப்படுத்தப்படுகின்றன.

இந்தப்பிரச்சினைக்குத்தீர்வுபெற்றுத்தருவதாக இந்த பிரதேச அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டார்கள்.ஆனால் தற்போது எவரும் இந்த பிரச்சினை பற்றி பேசுவதில்லை.இந்த காணி பிரச்சினை பற்றி ஆளும்தரப்பின் உறுப்பினர்களுக்கு கண் திறக்கப்படவில்லை

அபிவிருத்திகருத்திட்டங்களைவகுக்கும்போது சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதாக அரசுத் தலைவர் நேற்று (நேற்று முன்தினம்) குறிப்பிட்டுள்ளார்.இதன்பிரகாரமே மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.இது சிறந்தது.

சகல தரப்பினரது இணக்கப்பாட்டுடன் அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.அரசுத்தலைவர்யின் இந்த தீர்மானம் ஏன்திருகோணமலைமுத்துநகர்மக்களின்காணி பிரச்சினையின் போது எடுக்கப்படவில்லை.முத்து நகர் மக்களை ஏன் மாற்றான் தாய் பிள்ளையாக பார்க்க வேண்டும்.மன்னாரிலும், முத்து நகரிலும் இலங்கையர்களே உள்ளார்கள்.பலவந்தமான முறையில்மக்களின்காணிகளைகையகப்படுத்தும் செயற்பாட்டுக்கு நாங்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

கடந்த ஆளும்தரப்புக்கள் ஏற்றுக்கொண்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை முழுமையாக அமுல்படுத்துவதற்குமக்கள்இந்தஆளும்தரப்பிற்கு ஆணை வழங்கவில்லை.மக்களாணைக்கு முரணாகசெயற்பட்டுகம்பனிகளின்விருப்பத்துக்கு ஏற்பசெயற்படஆளும்தரப்புதீர்மானித்துள்ளது.இந்த மக்களின் நியாயமான கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தில் ஈடுபட தயார்.போலியான வாக்குறுதிகளை வழங்கி பிரச்சினைகளை மூடிமறைக்க முயற்சிக்க வேண்டாம் என்று ஆளும்தரப்பிற்கு குறிப்பிட்டுக்கொள்கிறோம்.கையகப்படுத்தப்பட்ட முத்துநகர் காணிகள் அம்மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் அதற்கு தொடர்ச்சியாக குரல் கொடுப்போம் என்றார்.

## மாகாண....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அமெரிக்காவின் புதிய வரிக்கொள்கையின் விளைவாக இலங்கை உள்ளடங்கலாக உலகின் பல நாடுகள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளன. தற்போதைய சூழ்நிலையில் இலங்கை பெற்றுக்கொண்ட பொருளாதார நலனை சரியான முறையில் பயன்படுத்தி புத்திசாலித்தனமாகவும், நீண்டகால திட்டமிடலின் அடிப்படையில் தேசிய ரீதியிலான ஏற்புடைமையுடன் செயற்படுவதன் ஊடாக எதிர்கால சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கமுடியும் என நம்புகின்றோம்.

நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியடைந்துவருவதுடன் அதனூடாக குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச்செலாவணி வருமானம் கிடைக்கின்றது. அத்தோடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலமான உட்பாய்ச்சலின் ஊடாகவும் நாட்டின் திறைசேரி பெருமளவுக்குப்பலமடைகின்றது. ஏற்றுமதித்துறை குறிப்பிடத்தக்களவு விரிவடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இருப்பினும் தற்போது நிலவும் மட்டத்தை விடவும் ஏற்றுமதிகள் மேலும் அதிகரிக்கவேண்டும்.

அதேவேளை சிங்கப்பூர் மற்றும் துபாய் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உலகின் முதன்மை வர்த்தக துறைமுக கேந்திர நிலையமாகத் திகழ்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு இருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக நாம் அவ்வாய்ப்பை பயனளிக்கக்கூடியவகையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அதேபோன்று சுகாதார மற்றும் கல்வி மத்திய நிலையமாகத் திகழ்வதற்கான சகல தகுதிகளும்இலங்கைக்குஇருக்கின்றன. இதுபற்றி அண்மையில் மாலைதீவு அரசுத் தலைவர் பிரஸ்தாபித்திருந்தார். இருப்பினும் உலகிலேயே தனியார் மருத்துவக்கல்வி வழங்கலை எதிர்க்கும் ஒரே நாடாக இலங்கை இருக்கின்றது. இப்போதேனும் இந்தப் பிற்போக்குத்தனமான கொள்கைகளை மாற்றியமைக்கவேண்டும்.

இது இவ்வாறிருக்க, உள்ளூராட்சி மன்றங்கள் இயங்க ஆரம்பித்ததன் பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் மாகாணசபைகள் இயங்காததன் விளைவாகப் பாரிய இடைவெளி ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக சுமார் 11 ஆண்டுகளாக பல முக்கிய அபிவிருத்தித்திட்டங்கள் பின்னடைவைச் சந்தித்துள்ளன. எவ்வளவு திறமை வாய்ந்தவராக இருப்பினும்மாகாணங்களுக்கானஆளுநர்களால் மாத்திரம்இதனைச்செய்யமுடியாது. இன்றளவிலே ஆட்சி நிர்வாகம் எனும் வாகனத்தில் மூன்று சக்கரங்கள் உரியவாறு செயற்பட்டாலும், நான்காவது சக்கரமான மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதித்துவம் தடைப்பட்டுள்ளது. அதன் விளைவாக குறிப்பாக வட, கிழக்கு மக்களால் ஆட்சி நிர்வாகத்தில் உரியவாறான பிரதிநிதித்துவத்தை வழங்கமுடியாதிருப்பது பாரிய அநீதியாகும். எனவே எந்தவொரு அரசியல் நலனுக்கும் அப்பாற்பட்டு, மாகாணசபைகளை உடனடியாக இயங்கச்செய்வது ஆளும்தரப்பின் பொறுப்பாகும். அதனைச் செய்யாமல் இருப்பதை மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படும் செயலாகவே நாம் கருதுகின்றோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலஸ்தீனத்திற்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், சிறிலங்காகம்யூனிஸ்கட்சிசெயலாளர்வைத்தியர் ஜீ.வீரசிங்கமற்றும்சிவில்அமைப்பினர்இணைந்து ஐக்கிய நாடுகள் வதிவிட அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவரிடம் கையளித்தனர்.

அதனையடுத்தஅங்குஊடகங்களுக்குகருத்து தெரிவித்தசிறிலங்காகம்யூனிஸ்ட்கட்சிசெயலாளர் வைத்தியர் ஜீ. வீரசிங்க குறிப்பிடுகையில், தேசிய மக்கள் கட்சி தவிர நாட்டில் உள்ள ஏனைய அனைத்து கட்சிகளும் இணைந்து பலஸ்தீனை பாதுகாக்கும் தேசிய அமைப்பை உருவாக்கி இருக்கிறோம். பலஸ்தீனில் இஸ்ரேல் ஆளும்தரப்பு முன்னெடுத்துச்செல்லும் இந்த இன அழிப்பை நிறுத்தி, அங்கு சமாதானத்தை ஏற்படுத்தும் வரை எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல இருக்கிறோம். அதேநேரம் நாங்கள் பிரதானமான சில கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றை கையளித்திருக்கிறோம். அதில் காசா மக்களுக்கு உணவு கொண்டுசெல்வதை இஸ்ரேல் தடை செய்திருக்கிறது. அதனை உடனடியாக நீக்கி, அந்த மக்களுக்கு உணவு பொருட்களை கொண்டுசெல்ல இடமளிக்க வேண்டும் கோரி இருக்கிறோம் என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிக்கையில், இஸ்ரேலுக்கு எதிராக நாங்கள் மேற்கொள்ள இருக்கும் போராட்டத்தின் கவனயீர்ப்பு போராட்டமாக இன்று, ஐக்கிய நாடுகள் வதிவிட அலுகலகத்துக்கு மகஜர் ஒன்றை கையளித்து ஆரம்பித்திருக்கிறோம். அடுத்த கட்டமாக நாட்டில் இருக்கும் அரசியல் கட்சிகள் சிவில் அமைப்பினர் என அனைவரையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டங்களை நடத்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

குறிப்பாக இதுவரை காலமும் இடம்பெற்ற மோதல்களில் இல்லாத அளவுக்கு நூற்றுக்கணக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு உறுப்பினர்கள்கொலைசெய்யப்பட்டிருக்கின்றனர். இஸ்ரேல், அமெரிக்கா இணைந்து மேற்கொள்ளும் அவர்களின் இந்த கொள்கையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். நாங்கள் மேற்கொள்ளும் இந்த போராட்டம் யூதர்களுக்கு எதிரானதல்ல, மாறாக நெதன்யாகுவின் சியோனிச ஆளும்தரப்பிற்கு எதிரான போராட்டமாகும். அதேநேரம் சுற்றுலா பயணிகளாக வரும் ஒருசிலருக்கு, இந்த நாட்டு மக்களுக்கு இல்லாத சலுகைகளை ஆளும்தரப்பு வழங்கி வருகிறது. ஆளும்தரப்பின் இந்த நடவடிக்கைக்கு எதிராகவும் நாங்கள் மக்களை ஒன்றுதிரட்ட நடவடிக்கை எடுத்து வருகிறோம். அத்துடன் இஸ்ரேல் பலஸ்தீனில் மேற்கொண்டுவரும் இன அழிப்புக்கு டொனால் ட்ரப்பின் அரைசாங்கம் மறைமுகமாக மேற்கொண்டுவரும் உதவிகளை நிறுத்துமாறும் தெரிவித்துக்கொள்கிறோம் என்றார்.

தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் ஜயந்தசமரசிங்க குறிப்பிடுகையில், நெதனடயாகு, டொனால் ட்ரம்பின் இணைந்து பலஸ்தீனில் பச்சிலம் குழந்தைகளை கொன்றும் நிலையில், அதுதொடர்பில் உறுதியான எந்த கண்டன அறிக்கையையும் வெளியிடாமல் பலவீனமான கொள்கையை அநுரகுமார அரசுத் தலைவர்யின் ஆளும்தரப்பு பின்பற்றி வருகிறது. அதனால் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் இந்த கொடூர செயலுக்கு எதிராக கடுமையான கொள்கையை கடைப்பிடிக்குமாறு தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிற்கு அழுத்தமாக தெரிவிக்கிறோம். அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபையும் இந்த விடயத்தில் உறுதியான கொள்கையை கடைப்பிடிக்காமல், பலஸ்தீனில் இடம்பெற்றுவரும் இன அழிப்பை கண்டுகொள்ளாமல் இருக்கிறது. எனவே பலஸ்தீனில் அமைதியை ஏற்படுத்தும் வரை எமது போராட்டத்தை தொடர்வோம் என்றார்.

## பாதுகாப்பு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு மாத்திரமல்ல இந்த ஆளும்தரப்பிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து 11 மாதங்கள் நிறைவடைந்துள்ளது.இருப்பினும் தேசிய தொழிற்றுறையை மேம்படுத்தவும், தொழில் முயற்சியாளர்களை பாதுகாப்பதற்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கையை தேர்தல் காலத்தில் விமர்சித்து விட்டு தற்போது அந்த கொள்கைகளையே அரசுத் தலைவர் அநுரகுமார செயற்படுத்துகிறார். அரசுத் தலைவர் பதவி மாத்திரம் மாற்றமடைந்துள்ளதே தவிர பொருளாதார கொள்கை ஒன்றாகவே காணப்படுகிறது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவுள்ளது. இந்தப் பிரேரணைக்கு எதிராகவே நான் வாக்களிப்பேன். ஏனெனில் அருண ஜயசேகர கிழக்கு மாகாண கட்டளைத்தளபதியாக செயற்பட்டதை அடியொற்றியதாகவே இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுகிறது.

முன்னாள்இராணுவஉயர்அதிகாரிசெயற்பட்ட விதத்தை அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்த முடியாது. எதிர்க்கட்சியின் இந்த செயற்பாட்டுக்கு உடந்தையாக என்னால் செயற்பட முடியாது என்பதால் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பேன்.

பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையால் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி மேலும் பலமடையும். ஆளுங்கட்சியை பலப்படுத்துவதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தி இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருகிறது.இந்த பிரேரணையால் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வித பயனும் கிடைக்காது என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செம்மணி; 'ஸ்கான்' வசதியின் விரிவாக்கம்

வடக்கின் செம்மணி பகுதியில் மனித எலும்புக்கூடுகள் அடங்கிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு, நீண்டகாலமாக நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்தில், அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் (scan) தொழில்நுட்ப ஆய்வின் அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை, அங்குள்ள புதைகுழி பகுதிகளை முழுமையாகத் தோண்டி ஆராய்வதற்கு மேலும் 8 வாரங்கள் தேவை என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

இது, செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் செல்லக்கூடிய வாய்ப்புகளை வெளிப்படுத்துகிறது. புதிய 'ஸ்கான்' வசதிகள், மண்ணுக்கடியில் உள்ள அமைப்புகளை, நிலமாற்றங்களை, மற்றும் அசாதாரண நிலப்பகுதிகளை அடையாளம் காண மிகவும் பயனுள்ளதாக உள்ளன. குறிப்பாக, புதைகுழிகள், அடக்கம் செய்யப்பட்ட பொருட்கள், எலும்புக்கூடுகள் போன்றவற்றின் இருப்பிடங்களை முன்கூட்டியே கண்டறிந்து, தோண்டுதலை துல்லியமாக மேற்கொள்ள இந்த தொழில்நுட்பம் பெரும் உதவியாகிறது.

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கின் தொடக்கத்தில் இப்படிப்பட்ட மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகள் கிடைக்கவில்லை. அப்போது, தோண்டுதல் நடவடிக்கைகள் பெரும்பாலும் நேரடி சாட்சிகள் காட்டிய இடங்கள், மற்றும் கண்களால் பார்வையிடக்கூடிய அடையாளங்களை மட்டுமே சார்ந்திருந்தன. இதனால், பல இடங்கள் ஆராயப்படாமல் போயிருப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

அந்த நேரத்தில், கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகள்—அப்போது கைதாகி, தண்டிக்கப்பட்டவர்கள் – நீதிமன்ற விசாரணைகளின்போது, தாங்கள் புதைக்க உதவிய இடங்களை அடையாளம் காட்டியிருந்தனர். ஆனால், அவற்றில் பல இடங்களிலிருந்து மனித எச்சங்கள் எவையும் மீட்கப்படவில்லை. தொழில்நுட்ப வசதியின்மையால், அவர்கள் காட்டிய இடங்களின் துல்லியத்தன்மையைச் சரிபார்க்க முடிந்திருக்கவில்லை. சுற்றுப்புறங்களில் முறையான பரிசோதனைகள் நடைபெறவில்லை.

இன்று நிலை மாறியுள்ளது. நிலத்தடி ஸ்கேன் தொழில்நுட்பம் (Ground Penetrating Radar - GPR) மற்றும் பிற அறிவியல் ஆய்வுகள், புதைகுழிகளை மிகத் துல்லியமாக அடையாளம் காண உதவுகின்றன. இதனால், தோண்டுதல் பணிகள் குறைந்த நேரத்திலும், குறைந்த சேதத்துடனும் மேற்கொள்ளமுடிகிறது. அதேசமயம், புதைகுழிகளின் பரப்பளவை முழுமையாக மதிப்பிடுவதும் சாத்தியமாகிறது.

இதனை முன்னிட்டு, பழைய வழக்கை மீண்டும் எடுத்துச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. குறிப்பாக, செம்மணி வழக்கின் தொடக்கத்தில் சாட்சிகள் அடையாளம் காட்டிய இடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் 'ஸ்கான்' பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்தக் காலத்தில் ஆராயப்படாத பகுதிகள், இன்று புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் வெளிச்சத்திற்கு வரக்கூடும். இது, உண்மையை முழுமையாக வெளிக்கொணருவதற்கு மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி வழங்குவதற்கும் அவசியமான ஒன்று.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருப்பது, சான்றுகளை இழக்கும் அபாயத்தை ஏற்படுத்தும். புதைகுழிகளில் இருந்து கிடைக்கும் எலும்புக்கூடுகள், உடைகள், பொருட்கள் போன்றவை, நுண்ணறிவு ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்படலாம். மரபணு (டிஎன்ஏ) பரிசோதனைகள் மூலம், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வழங்கப்படலாம். இது, தசாப்தங்களாக நீடித்து வரும் காணாமற்போனவர்களின் துயரத்தை குறைக்கும் ஒரு முக்கியமான வழியாகும்.

இங்கு அரசு மற்றும் நீதித்துறையின் பங்கு முக்கியம். நீதிமன்ற அனுமதி, தொழில்நுட்ப நிபுணர்கள், மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஆகியோர் இணைந்து, வெளிப்படையான முறையில் இந்த ஆய்வுகளை நடத்த வேண்டும். எந்த அரசியல் அழுத்தமும், எந்த தாமதக் கொள்கையும் இவ்விடத்தில் இடம்பிடிக்கக்கூடாது.

பழைய வழக்குகளை மீளத் திறப்பது, சிலருக்கு அரசியல் ரீதியாக சிரமத்தை ஏற்படுத்தலாம். ஆனால், நீதியும் உண்மையும் எந்த அரசியல் சிரமத்தையும்விட மேலானவை. செம்மணி வழக்கில் தொடக்கத்தில் இருந்த குறைபாடுகளைச் சரி செய்யாமல் விட்டால், அது நீதியின் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும்.

இது, வடக்கு மக்களின் மனதில் பல ஆண்டுகளாக பதிந்துள்ள 'உண்மை வெளிவருமா?' என்ற சந்தேகத்திற்கு விடை கொடுக்கும் ஒரு முக்கிய முயற்சியாக இருக்கும். நீதியைப் பெறுவதற்கான முயற்சி, காலப்போக்கில் மங்கிவிடக்கூடாது. மாறாக, தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி, அதனை வலுப்படுத்தவேண்டும்.

இன்று கிடைத்துள்ள 'ஸ்கான்' தொழில்நுட்பம் விரிவாக்கப்பட்டு. அதை முழுமையாகப் பயன்படுத்தி, பழைய வழக்குகளையும் புதிய சான்றுகளுடனும் மீள ஆய்வு செய்வது — நம் சமூகத்திற்கும், வருங்கால தலைமுறைக்கும் நாம் செய்ய வேண்டிய கடமை.

# நிலையான அரசியல் தீர்வை வலியுறுத்தி பொத்துவிலில் நேற்று அமைதிப் போராட்டம்

(சகாதேவராஜா)




நிலையான அரசியல் தீர்வுக்கான 100 நாள்கள் செயல்முனைவின் 3 வது வருட பூர்த்தியையொட்டி நேற்று பொத்துவிலில் அமைதிவழிப்போராட்டம் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பெண்கள்வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் பொத்துவில் கனகர் கிராமப் பகுதியில் இடம்பெற்ற இப் 14 வது நாள், பலர் பதாகைகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.




வடக்கு கிழக்கு மாகாணத்தில் மீளப் பெற முடியாத சமஸ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தை வலியுறுத்தக் கோரி இப்போராட்டம் நடைபெற்றது.

மகளிர் அமைப்பினர் மற்றும் பொத்துவில் கனகர் குடியேற்ற கிராமப் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

அங்கு ஊடக வெளியீடு ஒன்றும் வெளியிடப்பட்டது

# விமர்சனங்களைத் தவிர்க்க அதிகாரிகளை ஆளும்தரப்பு பழிவாங்குவதற்கு கண்டனம்

## தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவிப்பு

ஆளும்தரப்பு தம் மீதான விமர்சனங்களை மறைப்பதற்காக அரச அதிகாரிகளை பழிவாங்கும் செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம். செய்மதி தொடர்பில் தகவல் வழங்கிய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை விடுத்து, அது குறித்த உண்மையான நிலைவரத்தை கண்டறிய முயற்சிக்குமாறு வலியுறுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருணாகலில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமரின் கூற்றுக்கு முரணான கூற்றினை அமைச்சரவை அமைச்சரொருவர் தெரிவித்துள்ளமையானது நாடாளுமன்றத்தின் பொறுப்பு கூறல் மற்றும் சம்பிரதாயத்தை மீறும் செயலாகும். தாம் கூறிய பொய்களை மீண்டும் மீண்டும் தெரிவித்து அவற்றை நியாயப்படுத்துவதையே இந்த ஆளும்தரப்பு செய்து வருகிறது. இது தொடர்பில் தகவல் வழங்கிய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை விடுத்து, செய்மதி தொடர்பில் உண்மையை நிலைவரத்தை கண்டறிய முயற்சிக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

தமக்கு தேவையான பதிலை வழங்காததால் அதிகாரிகளை பழிவாங்குவதற்கு முயற்சிக்கின்றனர். அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் பிரத்தியேக செயலாளரின் மனைவியே முதலீட்டு சபையின் பிரிவொன்றின் பணிப்பாளராக பணியாற்றுகின்றார். இவர்களது அனுமதியின்றி, பிரதமர் அலுவலகத்தின் அனுமதியின்றி ஏனைய அதிகாரிகள் தகவல்களை வழங்கியிருக்க வாய்ப்பில்லை. எனவே தம்மீதான விமர்சனங்களை மறைப்பதற்காக அரச அதிகாரிகளை பழிவாங்கும் செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம்.

இளைஞர் மாநாட்டில் உரையாற்றிய அரசுத் தலைவர் அரச சேவையை விமர்சித்திருந்தார். அதாவது அரச அதிகாரிகள் தமக்கேற்றவாறு பணியாற்றவில்லை என்பதையே அரசுத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அரச அதிகாரிகள் என்பவர்கள் ஏதேனுமொரு அரசியல் கட்சிக்கு சார்பாக செயற்பட வேண்டியவர்கள் அல்ல. அவர்கள் வெள;வேறு காலங்களில் வெவ்வேறு ஆளும்தரப்புங்களின் கீழ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களாவர். எனவே வழிகாட்டல்கள், ஆலோசனைகள் ஊடாகவே அவர்களிடமிருந்து எந்தவொரு சேவையையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அதனை விடுத்து அரசியல் ரீதியான நியமனங்களை வழங்கி அவர்களால் மாத்திரமே தாம் கூறுவதை செய்ய முடியும் என இவர்கள் நினைத்தால் அது தவறாகும். நாட்டிலுள்ள அரச உத்தியோகத்தர்களே இந்த அராசங்கம் ஆட்சியைப் பெறுவதற்காக பாடுபட்டனர். தற்போது மேலும் 60 000 பேர் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. தேசிய மக்கள் சக்திக்காக செயற்பட்டவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. கடந்த காலங்களில் அரச சேவை அரசியல் மயப்படுத்தியவர்களை கடுமையாக எதிர்த்தவர்கள் இன்று அதனையே நடைமுறைப்படுத்துகின்றனர் என்றார்.

## காலாண்டிற்கு ஒரு தடவை

# நீதித்துறை அதிகாரிகளின் வீடுகளை முறையாகப் பராமரிக்க நடவடிக்கை

ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தடவை நீதித்துறை அதிகாரிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீளாய்வு செய்து திருத்துவதற்கு தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் ஊடாக மேல் நீதிமன்ற வளாகங்களில் அய்வுகளை மேற்கொள்ள இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்கள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை என கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸ் வெளயிட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறையாகதுப்பரவு செய்யப்படாமையால் நுளம்புபெருக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பிலும் தகவல் வெளயாகியுள்ளது.உத்தியோகபூர்வ இல்லங்களை முறையாக பராமரிப்பது அதிகாரிகளின் கடமையென நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸ் தெரிவித்துள்ளார்

# தேசிய புத்தாக்க முகவராண்மையின் தரத் தேவைகள் குறித்து ஆலோசனை

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் உள்ள தேசிய புத்தாக்க முகவராண்மையின் (NIA – National Innovation Agency) வழிகாட்டலின் கீழ், உலகளாவிய புத்தாக்க குறியீட்டுடன் (Global Innovation Index) தொடர்புடைய தரவுத் தேவைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த கூட்டம் நடைபெற்றதாக அரசுத் தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் விஞ்ஞான, தொழில்நுட்பம், கல்வி மற்றும் கைத்தொழில் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த சிரேஸ்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

7 முக்கிய கட்டமைப்புகளின் கீழ் 80 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி நாடுகளின் புத்தாக்க செயல்திறனை அளவிடும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய புத்தாக்க குறியீட்டு தரவரிசையில் இலங்கையின் நிலையை உயர்த்த அனைத்து தரப்பினர்களையும் ஈடுபடுத்துவதே இந்தக்கூட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டின் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துதல், முதலீட்டை ஈர்த்தல் மற்றும் அறிவு, தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோருக்கான மையமாக மாறுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கலாச்சாரத்தை வளர்ப்பது, அரச-தனியார் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவது மற்றும் தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப வலுவான புத்தாக்க சுற்றுச்சூழல் கட்டமைப்பை உருவாக்குவது மற்றும் ஆராய்ச்சி, தொழில்நுட்பம், படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை நோக்கி நாட்டை வழிநடத்துவது ஆகியவற்றில் ஆளும்தரப்பின் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

தேவையான தரவுகளின் முக்கிய பாதுகாவலர்களான முக்கிய அமைச்சுக்கள், தேசிய நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்னணி தனியார் துறை பிரதிநிதிகள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தரவு இடைவெளிகளை சீர்செய்தல், ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் மற்றும் நாட்டின் புத்தாக்க செயல்திறன் குறிகாட்டியை ஆதரிப்பதற்காக அனைத்து தரப்பினர்களுக்கும் தெளிவான பங்களிப்பை வரையறுத்தல் ஆகியவற்றில் இந்த திட்டம் கவனம் செலுத்தியுள்ளது.

ஆரம்ப அமர்வைத் தொடர்ந்து, இலங்கையின் புத்தாக்கத் திறன் உலக அரங்கில் துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்து தரவு சேகரிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான ஒரு நிலையான தேசிய பொறிமுறையை வரைபடமாக்குவதற்கான ஒரு செயற்பாட்டு அமர்வு நடைபெற்றது.

புத்தாக்கம், கொள்கைரீதியில் முன்னுரிமையானது மட்டுமல்லாமல் தேசிய முன்னேற்றத்தின் நடைமுறை இயக்கியாக மாற்றுவதற்கான ஆளும்தரப்பின் உறுதிப்பாட்டை இந்த முயற்சி பிரதிபலிக்கிறது.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிருஷாந்த அபேசேன, ஹிஹுருபு நிர்வாகசபையின் தலைவரும் அரசுத்தலைவர்யின் செயலாளருமான கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் வை.எல்.எம். நவவி மற்றும் நாட்டின் பல்வேறு முக்கிய நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT

காலைக்கதிர் Kalaikkathir









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2025இல் வெளியிடப்பெற்றது